Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சிதம்பர நடராஜர் கோவிலின் சிற்பக்கலை

**முனைவர் இரா. ரேவதி**
**தமிழ் உதவிப்பேராசிரியர், அறிவியல் மற்றும் மானிடவியல் துறை**
**பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி, நாகர்கோவில்.**

**88**

**முன்னுரை**

கலைகளில் சிறந்தகலை சிற்பக்கலை என்பர். கண்களால் கண்டு மனதால் நுகரப்படுவது சிற்பக்கலை. கோவில்களில் உள்ள சிலைகளைக் காணுமிடத்து நம் முன்னோர்கள் சொன்ன பழமொழிகள்தான் நினைவிற்கு வருகிறது. "கல்லை கண்டால் நாயகனைக் காணோம்; நாயகனைக் கண்டால் கல்லை காணோம்" என்பதே அப்பழமொழி. கோவில்களில் உள்ள சிலைகளைக் கல்லென்று நினைத்துப் பார்த்தால், நாயகனான கடவுள் தெரிவதில்லை. கல்தான் நாயகனான கடவுள் என்று நினைத்துப் பார்த்தால் சிலை வடிக்கப்பெற்ற கல் தெரிவதில்லை என்பர்.

**சிற்பக்கலை**

சங்க காலத்தில் சிற்பிகள் சுதை மரம், கல், பஞ்சலோகம் முதலான பொருட்களில் சிலை வடித்தார்கள். கோவில்கள் இறைவனின் உறைவிடமாக மட்டும் அல்லாமல் கலைகளோடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் பலவற்றையும் புலப்படுத்தும் கலைக்கூடங்களாகத் திகழ்கின்றன.

சிற்ப உருவங்களை முழு உருவங்கள் என்றும் புடைச்சிற்பங்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். சிலைகளில் முன்புறம் பின்புறம் முழுமையாக வெளிப்பட்டால் அதனை முழு உருவச் சிற்பம் எனலாம். சிலைகளில் ஒருபுறம் மட்டும் தெரியும்படி சுவர்களிலும் பலகைகளிலும் அமைக்கப்படுவது புடைச்சிற்பங்கள் எனலாம். இவ்விரண்டு விதமான சிற்பங்களும் கோயில்களில் அமைக்கப்பட்டிருக்கும்.

சிலை வடிப்பதற்குத் தேவையான பொருட்களாக திவாகர நிகண்டு பின்வரும், பாடலின் மூலம் வரிசைப்படுத்துவண்டு.

**"கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்**
**மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்**
**கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை**
**பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன."**

(வேங்கடசாமி.மயிலை.சீனி.நுண்கலைகள் ப.13)

**சிதம்பரம் நடராஜர் கோவில் அமைப்பு**

**"பாணியும், தூக்கும் சீரும் என்று இவை**
**மாண் இழை அரிவை காப்ப**
**ஆணம் இல் பொருள் எமக்கு அமர்ந்தனை ஆடி"**

(கலித்தொகை, கடவுள் வாழ்த்து)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சங்க இலக்கியமான கலித்தொகையின் முதல் பாடல் சிதம்பரம் நடராஜர் துதிப்பாடலாக அமைந்துள்ளது. எனவே சங்க காலத்திற்கு முன்பே சிதம்பர தலம் தில்லைவனமாக புகழ் பெற்றிருந்ததை உறுதியளிக்கிறது.

சுமார் 51 ஏக்கர் நிலப்பரப்பில் பலவகை கட்டிடங்களையும் மண்டபங்களையும் உள்ளடக்கியது நடராஜர் கோவில். இக்கோயிலுக்கு நான்கு திசைகளிலும் நான்கு இராசகோபுரங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் 135 அடி உயரம் உடையது ஏழு தளங்களுள்ள இக்கோபுரங்கள் ஒவ்வொரு சிகரத்திலும் 13 பெரிய செப்புக் கலசங்கள் உள்ளன. கோபுரம் ஒவ்வொன்றும் 90 அடி நீளம் 60 அடி அகமும் உள்ள நீள் சதுர அமைப்புடன் கூடிய அடிப்பகுதி கொண்டது. அடிமட்டத்திலிருந்து 36 அடி உயரம் வரையில் நேராகக் கருங்கற் கட்டடமும், அதன் மேல் படிப்படியே குறுகிச் செல்லும் சுதை வேலைப்பாட்டு கட்டடமும் உடையது.

**கோபுரத்தில் அமைக்கப்பெற்ற சிலைகள்**

இங்குள்ள நான்கு கோபுரங்களும் சிற்பக் களஞ்சியமாக விளங்குகின்றது. இக்கோபுரங்களில் அழகான மற்றும் கவர்ச்சியான பல சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தெற்கு வாசல் பாண்டிய ஆட்சியின் கட்டடக் கலைஞர்களால் கட்டப்பட்டது.

கிழக்கு கோபுரம் ஆடற்கலையின் அனைத்து அம்சமாக காட்சியளிக்கின்றது. இக்கோபுரம் இந்திய பாரம்பரிய நடன வடிவத்தில் 108 தோரணைகளால் அலங்கரிக்கபட்டுள்ளது. மற்றொரு கோபுரத்தில் இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, பராசக்தி, விநாயகர், முருகன், விஷ்ணு, தன்வந்திரி, இந்திரன், அக்னி, வாயு, குபேரன், புதன், திருதி, காமன், பத்ரகாளி, துர்க்கை கங்காதேவி யமுனாதேவி, ராகு, கேது. நாரதர், விசுவகர்மா, நாகதேவன், சுக்கிரன், லட்சுமி, வியாக்ரபாதர், அகத்தியர். திருமூலர், பதஞ்சலி ஆகியோரின் சிலைகள் வடிக்கப்பட்டுள்ளன.

**சிற்பங்களில் முத்திரைகள்**

சிற்பங்களில் பல முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கை முத்திரைகள் குறிப்பிடத்தக்கது. கை விரல்களை நீட்டுதல், கூட்டுதல், மடக்குதல், விளக்குதல், குவித்தல் போன்ற ஐந்து நிலைகளை அடிப்படையாகக் கொண்டு தன் எண்ணக் குறிப்புகளை சிலையாக வடிப்பர். இந்த ஐந்து நிலைகளையும் கை இலக்கணம் கை அமைதிகள் என்று கூறுவர். பரதநாட்டியத்தில் கூறப்படும் அபிநயங்களைக் கூறுவதால் முத்திரை என்றும் அழைக்கப்படுகிறது. இதனை பொதுவாக “ஹஸ்த முத்திரை“ என்று அழைப்பர்.

“தொழிற்கை முத்திரையில் 24 முத்திரைகளும் எழிற் கை முத்திரையில் நான்கும் இரட்டைகை 24 கை முத்திரையில் நான்கும் குறிப்பிடப்படுகிறது". (சிற்பக் கலை வரலாறும் ஆய்வும் தொ-1, ப.11)

"டமரு ஹதம்" என்று கூறப்படுகின்ற ஒற்றை தொழிற்கை முத்திரை உடுக்கை பிடித்துள்ள பாவனையை உணர்த்தும். ஆடல்வல்லோன் நடராஜ பெருமாளில் இச்சிறப்பான முத்திரையினைக் காணலாம். பிற முத்திரைகளைக் கோவிலின் சுற்றிக்கட்டப்பட்டுள்ள பிற தூண்களில் காணமுடிகிறது.

பொதுவாக கோயிலை சுற்றியுள்ள பலசிற்பங்களில் இம்முத்திரைகள் காணப்படும். ஒரு சில முத்திரைகள் கடவுள் படிமங்களில் கண்டிப்பாக காணப்படும். "வியாக்கியான ஹஸ்தம் என்று சொல்லப்படும் சின் முத்திரை தஷ்ணாமுர்த்தி, படிமங்களில் அமைந்துள்ளது. "சூசி" முத்திரை அதிக அளவில் துவாரபாலர் கஜசம்ஹார மூர்த்தி, காலசம்ஹார மூர்த்தி படிமங்களில் காணப் படுகின்றது. இந்த 32 முத்திரைகளுள் எதிலும் அடங்காத சில கை அசைவுகளும் அமையபெற்றுள்ளன.

**சிற்பக்கலையின் திருக்கோலங்கள்:-**

சிற்பங்களின் திருக்கோலங்களை நின்ற கோலம் அமர்ந்த கோலம், கிடந்தகோலம், அசைவு கோலம் என நான்காகப் பிரிப்பர்.

நின்ற அமர்ந்த, கிடந்த என்ற மூன்றுவகை கோலங்களும் திருமாலுக்கே உரியதாகும். நடராஜபெருமான் வீற்றிருக்கும் தில்லையிலே திருமாலும் வீற்றிருக்கிறார். நின்ற கோலத்தில் சமச்சீர் அமைப்புடன் தலையையும் உடலையும் நேராக நிமிர்த்தி, ஒருபாற் கோடாமல் நேர் நோக்குடையதாக நேராக அமைக்கப்படும்.

அமர்ந்த கோலத்தில் உடலை எப்பக்கத்திலும் சாய்வின்றி நேராகநிமிர்த்தி, கைகளை சமச்சீருடையதாகக் கோவித்து ஒரு காலினை மடித்தும் அல்லது இரு கால்களையும் மடித்தும் அமர்வது, அமர்ந்த நிலையில் செய்த கோலமாகும்.

கிடந்த கோலத்தில் ஆசனத்தின் மீது கால்களையும் கைகளையும் நீட்டி, உடலையும் தலையையும் படுக்கையில் கிடத்தி கண்களை நீட்டி, மூடிக்கொண்டு சம மட்டத்தில் மல்லார்ந்து படுத்த நிலையைக் குறிக்கும்.

அசைவு கோலம் எச்செயலையாவது கோயிலில் செய்வது போன்று காட்சியாளிப்பது. இவ்வாறாக கோவிலில் இருந்த சிலைகள் காட்சியளிக்கிறது. சிதம்பரத்தில் நடராஜர் நின்ற கோலத்தில் வீற்றிருக்கிறார்.

**மகுடங்கள்:-**

சிற்பங்களை அடையாளம் காண்பதில் தலையில் அணியும் மகுடங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்தந்த தெய்வங்கள் இன்னன்ன மகுடங்களை அணிந்திருக்கும் என்னும் ஒரு வரையறை உண்டு. அவ்வகையில் தமிழகத்து, சிற்பங்களின் இடங்களை மூன்றாக கூறுவர்.

ஜடாமகுடம் - சிவன், பிரம்மா மற்றும் சிவனின் அம்சமான மூர்த்திகளுக்கு அமைக்கப்பட்டுள்ளன.

கிரிமகுடம் – விஷ்ணு, அரசன், மற்றும் அரசகீர்த்தி பெற்ற இறைபடிமங்களில் அமைக்கப்பட்டு இருக்கும். காண்ட் மகுடம் - மேற்கண்ட இருபிரிவினரைத் தவிர்த்தும் விநாயகர் மற்றும் தேவியர்கள் படிமங்களில் அமைக்கப்பட்டிருக்கும். இவைகளைத் தவிர மேலும் சில மகுட அமைப்புகளும் உள்ளன.

ஜடாபாரம், ஜடாமண்டலம், ஜடா பந்தம், சர்ப்ப மௌலி, விரிசடை, சுடர்முடி, சிரஸ்திகரம், குந்தளம், தம்மில்லம் அளக சூடம். போன்ற மகுடங்களும் சிற்பங்களில் காணப்படுகின்றது.

இவற்றுள் விரிசடை என்பதனை நடராஜ பெருமாள் சூடியுள்ளார். "திரிசடைகள் தலையின் பின்புறத்திலிருந்து பிரிந்து. தலையின் இரு மருங்கிலும் வீசி விரிந்து எழிலுற அமைந்த சடை

விரிசடை ஆகும். விரிசடைகள் 5,7,8 அல்லது சடைகளாக இருக்கும் திரிசடைகளுக்கிடையே மணிகள் கோர்த்த பூச்சரங்கள் இருக்கும். கங்கா தேவியின் உருவமும் இருக்கும். மூன்று அல்லது ஐந்து வரிசைகளைக் கொண்ட பூச்சரங்களால் சடைகள் பிணைக்கப்பட்டிருக்கும் இவ்வாறு சிதம்பர நடராஜர் விரிசடையோடு காட்சியளிக்கிறார்.

**அணிகலன்களும் ஆபரணங்களும் !-**

பழந்தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பவை ஆபரணங்களே. சங்க கால மக்கள் பல ஆபரணங்களை அணிந்து நாகரிக வாழ்வினை வாழ்ந்தார்கள். என்பதனை அறிவோம். இதனை மெய்ப்பிக்கும் வகையில் சிலப்பதிகாரத்தில் மணிமேகலையைப் பற்றி கூறும்போது,

**"தெய்வ உத்தியொடு செழுநீர் வலம்புரி**
**தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி**
**மையீர் ஒதிக்கு மாண்புற அணிந்து"**

**(சிலம்பு.கடலாடு காதை105-107)**

தெய்வ உத்தியோடு வலம்புரி சங்கு ஆணிந்து, தொய்யகம், புல்லகம் ஆபரணங்களைத் தலைக்கோலம் மணிமேகலை சூடியுள்ளாள் என்று குறிப்படுகிறது. மாண்புற தலையில் என்னும் இதே பெயர்கொண்ட ஆபரணங்கள் சிற்பங்களிலும் பயின்று வந்துள்ளன. சிற்பம் ஒன்று முழுமை பெற்று அழகுடன் இருப்பதில் ஆபரணங்களின் பங்கு இன்றியமையாதது.

**தலைஅணிகள்:-**

சிற்பங்களில் தலை அணிகள் மூன்று வகையாக குறிப்பிடப்படுகிறது. தொய்யகம், பூரப்பாளை, புல்லகம் என்று குறிக்க பெறும் தலை அணிகள் விளக்கு நாச்சியார், நாட்டியபெண், கொடிப்பெண் ஆகிய சிற்பங்களில் சிறப்பாக இந்த தலை அணிகள் வடிக்கப்பட்டுள்ளது.

**காதணிகள்**

சிற்பங்களின் காதுகளில் பலவிதமான குழையும் குண்டலமும் காணப்படுகின்றன. வட்ட வடிவமானது, தட்டையானது. இரத்தினங்கள் பதிக்கப் பெற்றதுமான காதணி அமைப்பைக் கடிப்பு என்றும் கூறுவர். குழை என அழைக்கப்படும் குண்டலமானது மகர குண்டலம், சிம்ம குண்டலம், வியாழ குண்டலம் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உருத்திராட்சமும் குண்டலமாக காதில் இருக்கும். இவை எளிமையான காதணிகள் ஆகும். உலோகத்தினால் ஆன குண்டலத்தை, அனுமன் சிற்பத்திலும், உருத்திராட்ச குண்டலத்தை முருகன் காதிலும் காணலாம்.

**கழுத்தணிகள் :-**

ஆரம்பகாலத்தில் சிற்பங்களில் கழுத்தணிகள் சற்று எளிமையாகவும், பிற்கால சிற்பங்களில் அலங்காரமாகவும் இருக்கும், மிகுந்த நுண்ணிய வேலைப்பாட்டுடன் கழுத்தணிகள் சிற்பங்களில் காணப்பட்டன.

கழுத்தை ஒட்டிய ஆபரணம் கண்டிகை என்று அழைக்கப்படுகிறது. இது, அளவில் சற்று பெரியது, சிறப்பானது. தற்கால நெக்லஸ் போன்ற அமைப்புடையதை, சரப்பளி என்றும், சரப்பளிக்கும், கண்டிகைக்கும் இடையே அமைவது சவடி என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**மார்பணிகள்:-**

மார்பணிகள் தான் சிற்பங்களை மிக அழகாக காட்டக்கூடியவை. சன்னவீரம், பூணூல், ஸ்தனசூத்திரம், உரஸ் சூத்திரம் உதரபந்தம், உத்தரியம் போன்ற ஆபரணங்கள் சூட்டியிருந்ததாக சிற்பக்கலை, ஆய்வுகள் கூறுகின்றன. முப்பிரிகளையுடைய பூணூலில் இருந்த நான்காவது நூல் ஒன்று வலது மார்பின் கீழ்ப்புறத்தில் தொங்கச் சுற்றி, முதுகுப்புறம் சென்று பூணூலுடன் சேரும். இதற்கு 'ஸ்தன சூத்திரம்' என்று பெயர். இது முத்துச் சரமாகவோ அல்லது நூலாகவோ அமையும். இதனை ஆண், பெண், இருபாலர் படிமங்களிலும் காணலாம்.

**இடையணி:-**

ஆண் வடிவங்களிலும் பெண் வடிவங்களிலும் இடையணி அழகாக சூட்டப்பட்டுள்ளன. இடை அழகினை சிறப்பித்துக்காட்டுவதோடு இடையினில் அணியப்பட்டுள்ள ஆடைகளை இறுக பினணப்பதும் இவற்றின் வேலை ஆகும். சிற்ப வேலைப்பாடுகளில் இடையணிகள் மிக கவர்ச்சியாகவும் பல்வேறு தோற்றங்களிலும் காட்சியளிக்கின்றன. பெரும்பாலான சிற்பங்கள் இடை மற்றும் தொடை கொண்டே ஆபரணங்களை அழகுபடுத்தப்படும்.

இடையணிகளில் மேகலை, அரைஞாண், அரைப்பட்டிகை என்ற மூன்றும் சிறப்பு வாய்ந்தவை. இம்மூன்றையும் அரை ஞாண் அல்லது கடிசூத்தரமென்று குறிப்பிடுவர்.

பெண்கள் அணியும் ஒட்டியாளத்தை மேகலை என்பர். இலைக்கருணி அனைத்தும் மையத்தில் மணி பதிக்கப்பட்டதுமான முகப்பு அணியை யோனித்தடத்தை ஒட்டியவாறு அமைத்து முறுக்கிய மூன்று வடங்களால் அதனை பினைத்து இடுப்பைச் சாற்றிக் கட்டப்படும். இது மூன்று அல்லது நான்கு விரல் அகலமும் கொண்டு அமையும் இது எளிமையான அமைப்பாகும். பெண் சிற்பங்களுக்கு பெரும்பாலும் இவ்வணி அமையும். மேலும் இலைக்கருக்கு முகப்பு அணியை மூன்று வடங்களால் பிணைத்தலில் நடுவடத்தை பட்டிகையாகவும், எஞ்சிய இரு வடங்கள் முறுக்கிய கயிறாகவும் அமையும். இலை கருக்கு முகப்பு அணிக்கு மாற்றாக கற்பனை நயத்தோடு அமைந்த முடிச்சு ஒன்றைப் பிணைத்துச் செய்வதுமுண்டு, முடிச்சையும் முகப்பு அணியையும் சேர்த்தும் இருக்கலாம். முன்புறத்தில் இலைக்கு முகப்பு அணியை அமைப்பது போல், நேர் பின்புறத்திலும் அமையும்.

**கை அணிகள்:-**

சிற்பங்களின் கைகளில் வளையல் மற்றும் மோதிரங்கள் அழகுடன் அமைக்கப்பட்டிருக்கும். மணிகட்டுக்கு அருகில் அணியப்படுவது கைவளையல் அடுக்கடுக்காய் அணியப்படும். சிற்ப வடிவங்களில் வளையல்கள் ஒரே வகையாகவும் பல வகைகளாகவும் இருக்கும். சிறு வளையல்கள் இரட்டையாக அணியபட்டிருக்கும். ஒற்றையாக அணியப்படும் சிறு விரல் கனம் கொண்டு இருக்கம். பொதுவாக கை வளையல் ஐந்து வகைப்படும். அவை முறையே, சூடகம், செம்பொற் கைவளை. நவமணி வளை சங்கு வளை, பவள வளை ஆகும் இவற்றக் கெல்லாம் பொதுப்பெயர் கடகம் அல்லது வளை ஆகும்.

**ஆடைகள்**

சிற்பங்களில் பஞ்சாடை, பட்டாடை, தோலாடை மரவுரி ஆடை ஆகிய நான்கும் குறிப்பிடத்தக்கவை. அணிகலன்களை அமைப்பதிலும் இலக்கண மரபு வைக்கப்பட்டுள்ளது. ஆடைகள் சிற்ப வடிவங்களில் மிதமாக அணிவிக்கப்பட்டிருக்கும். அவை உடலை ஒட்டியும் அமைந்திருக்கும். இதன் மூலம் உடலின் இயல்பான மேடு பள்ளங்கள் உருவங்களின் அமைப்பு வெளிப்படும். ஆடைகளில் இயற்கையாக ஏற்படும் சுருக்கங்களையும், தொய்வுகளையும் அழகுற அமைக்கப்பட்டிருக்கும். மிகவும் ஒட்டியவாறு அமைக்கப்படும் போது ஆடை இல்லாத தோற்றத்தை அது கொடுக்குமாதலால் ஆடைகளின் கரைகளை உருட்டிச் செய்திருப்பார்கள். சுருங்கக் கூறின் ஆடைகள் படிமத்தின் மேனி அழகை மறைக்காமல் அதனை நன்கு புலப்படுத்துவதாக அமையும்.

**திருமேனிகள்**

சிற்பங்களின் உருவ அழகினையும், புராண கதைகளையும் செப்பு திருமேனிகள் எடுத்தியம்புகின்றன. இவைகள் வரலாறு பின்னனியாகவும், தத்துவ விளக்கமாகவும் விளங்குகின்றன. இதற்கு உதாரணமாக சிதம்பரம் நடராஜ பெருமானை கூறலாம். சிவபெருமானின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழிலையும் குறிப்பதாக கூறலாம்.

நடராசரின் கைகளில் உடுக்கையும் தீப்பிழம்பும் உள்ளன. உடுக்கை படைத்தலையும், தீ அழித்தலையும் குறிப்பிடுகின்றன. கீழ்வலதுகை ‘அஞ்ச வேண்டாம் என்பதைக் காட்டுகிறது. காலின் கீழுள்ள முயல்கள் ஆவணத்துக்கும், அவன் மீது ஊன்றிய கால் மறைத்தலுக்கும் அடையாளம். தூக்கிய திருவடி அருளல் என்பதை குறிக்கும். பண்டையக் காலத்தில் இச்செப்புத் திருமேனிகள் கோவில்களில் உற்சவ மூர்த்திகளாகவும், திருவிழாக் காலங்களில் வீதிகளுக்கு எடுத்துச் செல்லப்படும் இறையுருவங்களாகவும் பயன்படுத்தப்பட்டன.

**முடிவுரை**

கோவில்களில் காணப்படும் சிற்பங்கள் கலை உணர்வோடு நம் பன்பாட்டு கலாசாரத்தை எடுத்தியம்பும் சாரமாகவுள்ளன. சிதம்பர நடராஜர் கோவிலில் உள்ள சிற்பங்களும் மூலமூர்த்தியான நடராஜர் சிற்பமும் அறவியலோடு கூடிய ஆக்கம் என்றே கூறலாம். சிற்பிகளின் கைவண்ணமும், சிலைகளின் கவின்மிகு காட்சிகளையும் கண்டுகளிக்கலாம்.

**துணை நூற்கள்**

1. நுண்கலைகள், மயிலை சீனி.வேங்கடசாமி, கௌரா பதிப்பகம்.
2. கலித்தொகை, புலியூர் கேசிகன் தெளிவுரை, சாரதா பதிப்பகம்.
3. சிற்பக்கலை வரலாறும் ஆய்வும், சோழ வரலாற்று ஆய்வு சங்கம்.
4. சிற்பச் செந்நூல், வை. கணபதி ஸ்தபதி, தொழில்நுட்பக் கல்வி இயக்கம், சென்னை.
5. சிலப்பதிகாரம், புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம்.